OS 43/2022

வா.சா.1 முருகேசன் த/பெ ராமசாமி

நாள் 12.09.2025

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன். பணம் வட்டிக்கு கொடுக்கும் தொழில் செய்கிறேனா என்றால் ஆமாம். பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக இதே நீதிமன்றத்தில் பல வழக்குகள் வேறு நபர்கள் மீது தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் இல்லை. வழக்கு சொத்தை நான் விற்பனைக்கு கேட்டேனா அல்லது பிரதிவாதி விற்பனை செய்ய வந்தாரா என்றால் பிரதிவாதியை வெங்கடேசன் என்பவர் என்னிடம் அழைத்து வந்தார். கிரையம் பெறுவதாக சொல்லப்படும் சொத்து நஞ்சையா புஞ்சையா எவ்வளவு இடம் என்றால் நஞ்சை 1 ஏக்கருக்கும் அதிகமாக இருக்கும். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. கிரையம் செண்ட் எவ்வளவு ரூபாய்க்கு பேசப்பட்டது என்றால் ரூ.7 லட்சம் கிரையம் பேசப்பட்டது முன்பணம் ரூ.5 லட்சம் கொடுத்து ஒப்பந்தம் போடப்பட்டது 3 வருடத்திற்குள் கிரையம் செய்து கொடுக்கவில்லை என்றால் பணத்தை திருப்பி கொடுக்க வேண்டும் என்று பேசப்பட்டது.

2. ஒப்பந்தம் கடனுக்காக எழுதப்பட்டதா என்றால் கிரையம் செய்து கொள்ள தான் எழுதப்பட்டது. இரண்டு மூன்று முறை கூப்பிட்டு அதன் பிறகு தான் வழக்கு போட்டேன். பிரதிவாதி வட்டிக்காக என்னிடம் ரூ.3 லட்சம் கேட்டார் என்றாலும் நான் பொறுப்பிற்காக கிரையம் ஒப்பந்தமாக பத்திரம் எழுதிக்கொண்டேன் என்றால் சரியல்ல. 21.12.2021 எனது தரப்பில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு பிரதிவாதி என்னிடம் வந்து கேட்டார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் கேட்ட போது அசலும் வட்டியும் கொடுத்தால் கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்து கொடுப்பதாக நான் கூறினேன் என்றால் இல்லை. கிரைய ஒப்பந்தம் எழுதுவதற்கு பத்திரம் யார் வாங்கினார் என்றால் அவர் தான் வாங்கினார். ஒப்பந்த பத்திரத்தில் யார் சாட்சி கையொப்பம் போட்டது என்றால் வெங்கடேசன். வெங்கடேசன் என்பவரையும் மற்றொரு சாட்சியையும் பிரதிவாதி அழைத்து வந்தார். அந்த மற்றொரு சாட்சி யார் என்று எனக்கு தெரியாது. சாட்சி கையொப்பம் செய்தவரை சாட்சியாக விசாரிக்கலாமா என்றால் விசாரிக்கலாம்.

3. கிரைய ஒப்பந்த ஆவணத்தை யார் எழுதியது என்றால் பத்திர அலுவலகத்தில் யார் எழுதினார் என்று தெரியாது. சொத்து கிரைய தொகை பேசும் போது செண்ட் எவ்வளவு ரூபாய் என்று தொகை பேசப்பட்டது என்றால் மொத்தமாக தொகை பேசப்பட்டது. நான் கிரையம் வாங்க ஒப்பந்தம் போடவில்லை என்றாலும் பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததால் அதற்காக கிரைய ஒப்பந்தமாக போடப்பட்டது என்றாலும் அதனால் தான் செண்ட் எவ்வளவு தொகை கிரையம் பேசப்பட்டது என்று என்னால் சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. பொதுவாக யார் சொத்தை வாங்குகிறார்களோ அவர்கள் பெயரில் தான் பத்திரம் வாங்குவார்கள் என்றால் இல்லை எனது பெயரில் அவரை பத்திரம் வாங்கிவர சொன்னேன். அந்த சொத்தில் பம்புசெட்டு கிணறு இருக்கிறதா என்று விசாரித்தேனா என்றால் போர்வேல் இருக்கிறது சர்வீஸ் கனெக்ஷனும் இருக்கிறது. வா.சா.ஆ.1ல் போர்வெல் இருப்பதாகவும் சர்வீஸ் கனெக்ஷன் இருப்பதாகவும் விவரம் இல்லை என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது.

4. நான் அரசு கான்டரேக்டராகவும் இருக்கிறேன் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரிதான். இரும்பேடு கிராமம் வடவாண்டை தெரு நெ.36/2ல் தான் நானும் எனது மகனும் இருக்கிறோம் என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஒப்பந்தம் கடனுக்காக போடப்பட்டது என்றாலும் தற்போதும் பிரதிவாதி தொகையை திருப்பி செலுத்த தயாராக இருக்கிறார் என்றாலும் பணம் கொடுத்தால் வாங்கிக்கொள்கிறேன். வழக்கு சொத்தை பொறுத்து பிரதிவாதி ஏற்கனவே எனது மகன் பெயரில் கிரைய ஒப்பந்தம் போடப்பட்டு இதே நீதிமன்றத்தில் வழக்கு எண்.289/2022 என்று வழக்கு இருக்கிறது என்றால் சரிதான்.